றுக்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரை ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. இங்கே தனித்தமிழ் அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த அரசு, தமிழ்க் கல்லூரிகளில் பயிலும் பின்தங்கிய வகுப்பினருக்கும், அரிசன வகுப்பினருக்கும் ஆண்டொன் றுக்கு ரூ. 400 உதவித்தொகை கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனித்தமிழ் என்று சொல்வது வேறு. தமிழ் வளர வேண்டும் என்று சொல்லுவது வேறு. தமிழர்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தித் தருவது வேறு. தமிழை எடுத்துப் படிக்கிறவர்களுக்குத் தகுதி அடிப்படையில் கொடுக்கிற தன்மைகள் வேறு. பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கும் வகையில், நான்காண்டுகள் புலவர் படிப்புப் படிக்கிறவர்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்கப் படுகிறது. புலவர் படிப்புப் படிக்கிறவர்கள் பணம் செலவு செய்ய வேண்டியதில்லை; இலவசமாகப் படிக்கிறார்கள். மற்ற கல்லூரிகளில் படிக்க வேண்டுமானால் சம்பளம் கட்டிப் படிக்க வேண்டும். புகுமுக வகுப்பிற்கு இப்பொழுது சம்பளம் இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக, ஊதியத் தொகையில் இருக்கும் வேறு பாட்டைக் குறித்துத் தகவல் வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிந்து சொல்லவும், அதில் என்ன மாற்றம் என்பதையும் ஆராய இயலும்.

நாகப்பட்டினம் மருத்துவ மனையில் செவித்துறை கண்காணிப்பாளர் பதவி

* 212 வினா.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனையில் நர்சிங் சூப்பிரண்டெண்ட் பதவி எத்தனை நாட்களாக காலியாக உள்ளது?

(இ) அப்பதவிக்கு உடனடியாக நர்சிங் சூப்பிரண்டெண்ட் நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 28—11—1967-லிருந்து காலியாக உள்ளது.

(இ) அப்பதவிக்கு செவிலித்துறைக் கண்காணிப்பாளரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருக்கிறது. எனினும், அந்த செவிலித்துறைக் கண்காணிப்பாளரின் பணியை ஒரு முதுநிலை பெண் தலைமைச் செவிலியர் கவனித்து வருகிறார்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இவ்வளவு நாள் அது காலியாக இருப்பதற்குக் காரணம் என்ன? இனியாகிலும் உடனடியாக நியமிக்க அரசு அவசர உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த வேலை உருவாக்கப்பட்ட பிறகு அரசு விதிமுறைகளை வகுத்தது. விதி முறைகள் சரியல்ல என்று ரிட் பெட்டிஷன் கோர்ட்டுக்குச் சென்றது.

1970 செப்டம்பர் 3]

கோர்ட்டும் அந்த விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறவர்கள் பெண்களாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பதவிக்குத் தகுதியான போதுமான பெண்கள் இல்லை. அதுபற்றி இப்போது பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டு, சீனியாரிடி பிரகாரம் தேர்ந்தெடுக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் இதுவரை அந்தப் பதவிகள் காலியாக வைக்கப்படவில்லை. சீனியர் விமன் ஹெட் நர்சுகளை அந்தப் பதவிகளில் போட்டு வேலை நடந்து வருகிறது. ட்யூடி நர்சுகள் சீனியர் விமன் ஹெட் நர்ஸ் பணியை ஆற்றி வருகிறார்கள்.

Women students for B.E. Course.

*213 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether some girl students have been selected for the B.E. Course in 1969; and

(b) if so, the number selected?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 16.

திரு. கே. விநாயகம்: இப்படி ஆண்களே பயின்று வந்த துறையில் பெண்களும் பயில்கிறார்களே, அவர்களது உடல் கூறு இதற்கு சரிவர அமைகிறதா?

Is their sex against them in the matter of becoming proper engineers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சரிவர அமைந்து இருக்கிற காரணத்தினால்தான் 16 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுதியிருக்கிறது என்ற காரணத்தினால்தான் தேர்வுக் குழுவினரும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ரேடியோ என்ஜினியரிங், சிவில் என்ஜினியரிங் ஆகிய துறைகளில் அவர்கள் நன்றாகப் பணியாற்றுகிறார்கள். மெக்கானிக்கல் என்ஜினியரிங் பகுதிகளில்கூட மேல் நாடுகளில் பணியாற்றுகிறார்கள். 1965-66-இல் 4 பேர்கள் இருந்தார்கள். அதற்கு அடுத்த ஆண்டு 3 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 9 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 5 பேர்கள் என்றால் இந்த ஆண்டு 16 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 13 பேர்கள் சேர்ந்து பயின்று வருகிறார்கள்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர்

*214. வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள பர்மா தமிழர்களுக்கு தமிழக அரசு கடன் தொகை அளிக்க உத்தேசித்துள்ளதா?

(இ) எவ்வளவு ரூபாய் அளிக்க உத்தேசித்துள்ளது?